# நோவு-நிவாரண பராமரிப்பு அறிவுரை சேவை

## (Palliative Care Advice Service)

## 1800 360 000

**காலை 7 மணி - இரவு 10 மணி, வாரம் ஏழு நாட்கள்**

**www.pcas.org.au advice@mh.org.au**

வாழ்க்கையை மட்டுப்படுத்தும் விதத்திலான நோய் ஒன்றின் எவ்வொரு அம்சத்தைப் பற்றியும் சிறப்புத்துவ நோவு-நிவாரண பராமரிப்புத் தாதி அல்லது மருத்துவர் ஒருவருடன் 'நோவு-நிவாரண பராமரிப்பு அறிவுரை சேவை'யில் நீங்கள் பேசலாம்.

விக்டோரியா மாநிலத்தில் எந்த இடத்திலுமுள்ள, எவரொருவருக்கும் இந்த சேவை இலவசம்.

இந்த சேவையானது வாழ்க்கையை மட்டுப்படுத்தும் நோய்நிலையோடு வாழ்ந்துவருபவர்களுக்கும் அவர்களுக்கு ஆதரவுதவியாக இருப்பவர்களுக்குமானதாகும். இது குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் அயலவர்களுக்கானதாகும். மற்றும், இது மருத்துவர்கள், தாதிகள் மற்றும் இதர சுகாதாரப் பராமரிப்பு ஊழியர்கள் மற்றும் சேவை வழங்குனர்களுக்குமானதாகும்.

### பின் வருவனவற்றைப் போன்ற கேள்விகளில் எம்மால் உதவ இயலும்:

- நான் ஆதரவுதவி அளித்துவரும் நபருக்கு நோவு-தணிப்புப் பராமரிப்பினால் எவ்வாறு உதவ இயலக்கூடும்?
- பராமரிப்பாளராக இருப்பதைப் பற்றிய தகவல்கள் எங்கு கிடைக்கும்?
- சரியான நோவு-தணிப்புப் பராமரிப்பு சேவையைக் கண்டறிவது எப்படி?
- எனக்கிருக்கும் வலி, எனக்கிருக்கும் குமட்டல் மற்றும் எனக்கிருக்கும் மூச்சு-வாங்கல் ஆகியவற்றிலிருந்து நிவாரணம் பெற நான் என்ன செய்யலாம்?
- நான் எதைப் பற்றி யோசிக்கவேண்டும், மற்றும் எதற்காகத் திட்டமிடவேண்டும்?
- என்னுடைய சுகாதார பராமரிப்பு சேவை வழங்குனரிடம் நோவு-தணிப்புப் பராமரிப்பைப் பற்றி நான் எப்படிப் பேச வேண்டும்?

### மொழிபெயர்ப்பு மற்றும் மொழிபெயர்த்துரைப்பு

131 450-ஐ அழைத்து 1800 360 000-எனும் இலக்கம் வேண்டுமெனக் கேளுங்கள்.

### செவித்திறன் அற்றவரா அல்லது செவித்திறன் அல்லது பேச்சுத் திறன் குறைபாடு உள்ளவரா?

தயவு செய்து 'தேசிய தொடர்-மாற்று சேவை' (National Relay Service)-யை 13 36 77-இல் அழைத்து 1800 360 000-எனும் இலக்கம் வேண்டுமெனக் கேளுங்கள்.

### சுகாதாரப் பராமரிப்பு சேவை வழங்குநர்களுக்குப் பின் வரும் பிரச்சினைகளில் எம்மால் உதவ இயலும்:

- நோயறிகுறிகளைக் கட்டுப்படுத்துதல்
- பரிந்துரைப்புகள் அளித்தல்
- சரியான நோவு-தணிப்பு சேவை இருக்கும் இடத்தைக் கண்டறிதல்
- வாய் வழியாக உட்கொள்ளும் மருந்துகளுக்குப் பதிலாக ஊசி மூலமாய்ச் செலுத்தப்படும் மருந்துகளுக்கு மாறுதல்
- தொடர்ந்து திரவங்களைத் தோலுக்குக் கீழாய் உட்செலுத்திக்கொண்டிருத்தல் (syringe drivers)
- முடிவுகளை மேற்கொள்ளல் மற்றும் அதியுயர் பராமரிப்பைத் திட்டமிடல்

### இந்த சேவையினால் செய்ய இயலாதது எது?

மருந்துசீட்டுகள் அல்லது மருத்துவப் பரிந்துரைகளை அளிக்க, அல்லது உள்ளூர் சுகாதார பராமரிப்பு சேவை வழங்குனர்களால் அளிக்கப்படும் பராமரிப்பினை இடமாற்றம் செய்ய எம்மால் இயலாது.

சுகாதாரம் மற்றும் மனித சேவைகள் திணைக்கள'(Department of Health and Human Services)த்தின் நிதியுதவியைப் பெறும் 'விக்டோரிய நோவு-தணிப்புப் பராமரிப்பு அறிவுரை சேவை'(Victorian Palliative Care Advice Service)யானது 'ராயல் மெல்பர்ன் மருத்துவமனை'யினால் செயல்படுத்தப்படுகிறது மற்றும் விக்டோரிய அரசாங்கத்தின் ஆதரவுதவியினைப் பெறுகிறது. அந்தரங்கமான மற்றும் இலவசமான இந்த சேவையானது விக்டோரிய மாநிலத்திலுள்ள ஒவ்வொருவருக்குமானதாகும்

VICTORIA State Government | Health and Human Services